உ

சிவமயம்



மல்லாகம்

முன்னாள் செனேட்டரும்,

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவரும்,

பிரபல சட்டத்தரணியுமான

## திரு. சுப்பிரமணியம் நடராசா

அவர்களின்

# நினைவு மலர்

விபவ௵ வைகாசி௴

**1988**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

மல்லாகம்

முன்னாள் செனேட்டரும்,
யாழ். மாவட்ட அபிவிருத்திச் சங்கத் தலைவரும்,
பிரபல சட்டத்தரணியுமான

# திரு. சுப்பிரமணியம் நடராசா

அவர்களின்

# நினைவு மலர்

விபவ௵ வைகாசி௴

1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. சு. நடராசா அவர்கள்

உற்பவம் :
04 - 08 - 1911

பூரணத்துவம் :
20 - 02 - 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## திருவடி நோக்கிச் சென்றுவிட்ட

# திரு. சுப்பிரமணியம் நடராசா அவர்களின் மண்ணுலக வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

**மரபு மாண்பு**

யாழ்ப்பாணத் தமிழ் அரசர் வரிசையிற் பிரபல்யமான பரநிருபசிங்கன் வழிவந்த வென்றரசு கொன்ற மாமுதலிப் பட்டம் பெற்ற கயிலாய உடையார், மநுநாயக முதலி, உலகுகாவல முதலிச் சந்தானஞ் சார்ந்தவர்கள் திரு. நடராசா அவர்களின் தந்தை தாயர், திருமதி சத்தியவதி நடராசா அவர்களின் பெற்றோர்.

வேலுப்பிள்ளை கந்தப்பர் என்ற பெரியவர் புத்திரி தெய்வானைப்பிள்ளையின் புத்திரன் சுப்பிரமணியம் அவர்களின் ஏக மகன் திரு. நடராசா அவர்கள்.

கந்தப்பரின் தந்தையின் தந்தை கதிர்காமர் மூத்த தம்பி மநுநாயகமுதலி.

கந்தப்பர் அவர்களுக்கு வேலாயுதர் மயில்வாகனம் சரவணமுத்து சின்னக்குட்டியர் இராமுப்பிள்ளை — புத்திரரும் தெய்வானைப்பிள்ளை புத்திரியும் ஆக மகப்பேறு.

இவர்களில் மயில்வாகனம் அவர்கள் மூத்தபிள்ளை என்னும் பெண்அணங்கை மணந்து அன்னபூரணம், பாக்கியம், சுந்தரம், கனகசபாபதி, அம்பிகைபாகர் ஆம் மக்கட்பேற்றைப் பெற்றவர். இந்தச் சுந்தரம் என்னும் நங்கையர்திலகம் தந்தையின் சகோதரியாகிய முன்சொல்லப்பட்ட தெய்வானைப் பிள்ளையின் புத்திரன் சுப்பிரமணியம் அவர்களைத் திருமணஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து அருந்தவப் பிள்ளைகளாம் நடராசா அவர்களையும் ஞானலக்குமி அவர்களையும் மகப்பேருகப் பெற்று மகிழ்ந்தனர்.

நடராசா அவர்களுக்கு தந்தைவழி வந்த சுற்றம் பெருக்கமானது. தாய்வழி விரித்த சுற்றமும் பெருக்கமானது.

## திருமணச் செழிப்பு

இத்தகைய உத்தமருக்கு உகந்த பத்தினியோ மல்லைப் புலவர் நமசிவாயம் அவர்களின் கனிட்ட புத்திரி சத்தியவதி. தங்கையார் ஞானலக்குமியின் தலைவன் நம. சிவப்பிரகாசம் அவர்களின் இளைய சகோதரி.

திருமணம் 1948ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 22ஆம் நாள் மங்களகரமான மாண்புச் சிறப்புடன் நிகழ்ந்தது.

## மகத்தான மக்கட் பேறு

நடராசா—சத்தியவதி இல்லறம் எல்லா வகையாலும் பொலிந்து விளங்க நன்மக்கட் பேறு இத்தம்பதிகளுக்கு இறைவன் அருளால் எய்தியது.

சிரேட்ட புதல்வி ஜெயலக்குமி இராமநாதன் கல்லூரியிற் கற்றுத் தேர்ச்சி பெற்றனர். திரு. அ. சுப்பிரமணியம் திருமதி தங்கரத்தினம் தம்பதிகளின் சிரேட்ட புத்திரன் விக்கினராசா அவர்கள் பொறியியல் நிபுணர் மணமகனுகத் திருமணம் நிகழ்ந்தது. ஒரு ஆண் ஒரு பெண் மக்கட் பேறமைந்தது. ஆண் குழந்தைப் பருவத்திலே தவறிவிட்டார்.

புதல்வி மனேகரி பல்கலைக் கழகப் பட்டதாரிப் பரீட்சைக்கு ஆயத்தம் செய்யுங் காலத்திலே திருமணம் நிகழ்ச்சி அமைந்த வகையில் அவ்வளவிலே கல்வித் தேர்ச்சி தடைப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிநகர் திரு. சுப்பிரமணியம் திருமதி மகேஸ்வரி தம்பதிகளின் புத்திரன் ஸ்ரீ கணேஸ்வரன் பொருளாதார கலைமாணி, மணமகனாக மனோகரி மணமகளாகத் திருமணம் மிகுசிறப்பாக நிகழ்ந்தது. இவர்களுக்கு இரண்டு புத்திரரும் ஒரு புத்திரியும் உளர்.

மூன்றாவது மகள் ஜோதிலக்குமி இராமநாதன் கல்லூரியிற் கல்வி கற்றனர். தெல்லிநகர் திரு. வேலுப்பிள்ளை திருமதி மகேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் விவேகானந்தன் வர்த்தக வங்கிச் சேவையில் உயர் அதிகாரி மணமகனாகச் செல்வி ஜோதிலக்குமிக்குத் திருமணம் வெகு சீராக நிகழ்ந்தது. இவர்களுக்குப் புத்திரர் மூவர்.

கனிட்டபுத்திரி சந்திராதேவி இராமநாதன் கல்லூரியிலும் புனித குடும்ப மகளிர் கல்லூரியிலும் கல்வி பயின்று அப்பயிற்சியைப் பயன்படுத்தி அலுவலக உத்தியோகம் வாய்க்கப் பெற்றனர்.

வட்டுநகர் திரு. முருகேசு மகேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் திரு. மு. சபாநாதன் சட்டத்தரணி அவர்கள் மணமகனாகச் செல்வி சந்திராதேவியின் திருமணம் சிறந்தவரிசையில் நிகழ்ந்தது. இவர்களுக்கு இரண்டு புத்திரரும் ஒரு புத்திரியும் மகப்பேறுகும்.

சிரேஷ்ட புத்திரன் திரு. ந. பாலசுப்பிரமணியம் பொறியியலாளராகக் கல்வி பயின்று இந்நாட்டிற் சிலகாலம் தொழிலியற்றி இங்கிலாந்து சென்று பொறியியற் கல்வியைத் தொடர்ந்து பொறியியலாளராகக் கடமை புரிகின்றனர்.

தந்தையாரின் சகோதரியின் ஏகபுத்திரி, திரு. நம. சிவப்பிரகாசம் திருமதி ஞானலக்குமி தம்பதிகளின் மகள் கேதாரகெளரி இராமநாதன் கல்லூரி ஆசிரியையைத் திருமணஞ் செய்தனர். திரு. பாலசுப்பிரமணியம் இவர்களுக்கு ஒரு புத்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய புத்திரன் ஸ்ரீ நமசிவாயம் கணக்கியலாளராகத் தேறிக் கடமைபுரிகின்றார்.

மல்லைநகர் திரு. இ. இராமநாதன் திருமதி கமலா மகள் நிகிலா அவர்களைத் திருமணஞ் செய்தனர் ஸ்ரீநமசிவாயம்.

## சட்டத்துறையில் உயர்மட்டம்

நாற்பதாண்டுகள் சட்டத்தரணியாகக் கடமை புரிந்த திரு. நடராசா அவர்கள் வாக்குவல்லபத்தாலும் விவேக மேலீட்டினாலும் பிரயாசத்தினாலும் சிறந்த வழக்கறிஞராகப் புகழ் பெற்றுப் பெருமதிப்புக்குரியவராய் விளங்கினர்.

சமாதான நீதவான் உத்தியோகச் சார்பிலா நீதவான் என்ற பட்டத்தைப் பெற்றனர். ஆனால் அரசினர் தமிழினத்தின் உரிமைகளை வழங்கத் தவறிவிட்டதென்று சுட்டிக் காட்டி அப்பட்டத்தையும் பதவியையும் உதறித்தள்ளிவிட்டனர்.

வடமாகாணத்தின் சட்டத்தரணிகளின் முன்வரிசையில் இடம்பெற்ற இவர் அரசியல் சம்பந்தமான குற்றச்சாட்டு வழக்குகளிலே ஏற்பட்டுக் கீர்த்திபெற வாதாடிவந்தனர்.

நீதிபதிகள் திரு. நடராசாவுக்குப் பெருமதிப்புக் கொடுத்தனர். அவ்வாறே சக சட்டத்தரணிகளுக்கும் வழக்காடுபவர்களுக்கும் இன்றியமையாதவர் ஆக விளங்கினர்.

## அரசியல் வாழ்க்கையிற் பரவியது

கல்லூரி மாணாக்கனாக விருந்த காலந் தொடக்கம் பாரதநாட்டுப் பெருந்தலைவர்களின் தியாக வரலாற்றினைக் கேட்டறிந்த அந்த எழுச்சியில் ஈர்க்கப்பட்ட திரு. நடராசா அந்நாட்களில் மகாத்மாகாந்தி, ஜவஹர்லால் நேரு, சரோஜினி நாயுடு, இராசகோபாலச்சாரியார் இன்னும் சிலர் இந்நாட்டிலே வந்து மக்கள் முன்பு தேசியவுணர்ச்சியை நன்கு ஊட்டிய வகையில் இவரும் ஈடுபட்டிருந்தனர். இதன் விளைவாக வாலிபர் போராட்டம் இங்கே எழுந்ததும் அதிலே அயர்ந்துகொண்டு அயராதுழைத்தனர். இவருக்கு ஆசிரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராக விருந்த திரு. வி. முத்துக்குமாரு, M. A. அவர்கள் இவரின் அரசியற் குருவானூர். இதைத் தொடர்ந்து யாழ் நாட்டிலே அரசியல் உணர்ச்சி எழுச்சியாகி உச்சக்கட்டத்திலே திருவாளர் G. G. பொன்னம்பலம், திருவாளர் S. J. V. செல்வநாயகம் இணைந்து நிறுவிய தமிழ்க்காங்கிரசிலே தீவிர மாக உழைத்துவந்தார். ஆனால் இரண்டு மூன்று ஆண்டு களுக்குள் இவ்விரு தலைவர்களும் வெவ்வேறு திசையிலேயே செல்லப் பிரிந்தபொழுது திரு. செல்வநாயகத்தின் அணியில் முக்கிய நிருவாகி ஆகிப் பல சத்தியாக்கிரக நிகழ்ச்சிகளிலே பங்குபற்றித் தடுப்புக் காவலிலே நீண்டகாலம் அரசியற் றவம் புரிந்து தமிழ் அரசுக் கட்சியின் இலட்சியங்களுக்காக அயராதுழைத்தார்.

பாராளுமன்றத்திலே மேலவையில் இக்கட்சியின் சார் பாக ஆறுவருடங்கள் 1965—1971 வியக்கத்தக்க அரசியல் வாதியாக விளங்கினர்.

மாவட்ட அபிவிருத்திச்சபையிலே தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டதும் பரபரப்பான வகையிற் சபையை நடத்தி ஈழக்கொள்கையையே அடிப்படையாக வைத்துத் துணிவா கச் செயலாற்றி வந்தனர். கேரதீவு—சங்குப்பிட்டிப் பாலம் (மகாதேவாப் பாலம்) அரைகுறையாக விருந்ததை உடனடி யாகச் செயலாற்றி ஓரளவுக்குப் பூரணப்படுத்தினர். தென் இந்தியாவுக்கும் யாழ் நாட்டுக்கும் கப்பற்சேவை அமைக்க வும் திட்டம் தீட்டி யிருந்தனர். ஆனால் மத்திய அரசு மாவட்ட சபைகளின் திட்டங்களைச் சொல்லளவிலே அங்கீகரித்துச் செயலில் முட்டுக்கட்டையாக முனைந்து நின்ற வகைகளிலே திரு. நடராசா தனது பதவியை வேண்டாம் என்று விட்டு அதினின்றும் விலகிவிட்டார். உள்ளத்திற் பட்டதை உள்ள வாறு உரைப்பதும் அதனால் நண்பர்கள் தோழர்களுடனும் கருத்துவேறுபாடு கொள்வதும் இருந்தது. அது இந்த வீரரின் புனித நோக்கமே. ஈழத்தின் அரசியலில் இவருக்குரிய இடம் முதல்வரிசையேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமூகப்பணியில் அமோக ஆட்சி**

அரசியலில் ஆதிக்கம் விரிவுபெறச் சமூகத்தொண்டு அத்தியாவசியம். திரு. நடராசா அவர்கள் அரசியலில் புகு முன்பே சமூகப்பணியில் ஈடுபடத் தொடங்கியது விசேட குறிப்புக்குரியது.

கூட்டுறவுக்கொள்கை அரசியல் ஆர்வமிக்கவர்களுக்குத் தன்பாட்டிலேயேயமையும். எனவே திரு. நடராசா அவர்கள் இத்துறையில் முக்கியத்துவம் பெற்றனர்.

தெல்லிப்பளைக் கூட்டுறவுச்சங்க வைத்தியசாலை நிறுவ முன்னோடியாக நின்றவர்களில் இவர் முக்கியமானவர். 1947ஆம் ஆண்டு நிறுவப்பெற்ற இச்சங்கத்திலே நீண்ட காலம் தலைவராகவும், நிருவாகியாகவும் இருந்து அரும்பணி யாற்றியவர். வைத்தியசாலைக்குரிய பெரும்பரப்பு நிலத்தை நன்கொடையாகத் திருவாளர் தம்பு கனகரத்தினம் அவர்கள் மனமுவந்தளிக்கத் தூண்டியவர் இவரே. இந்த விசால மான காணியிலே பாரிய கட்டிடங்களை எழுப்பத் திட்டமிட் டுக் கட்டிமுடிப்பித்த குழுவுக்குத் தலைமைதாங்கியவர் இவரே.

இந்த வைத்தியசாலையின் நிதிக்காக இருமுறை களி யாட்ட விழா அமைப்பித்துப் பணம் சேகரிக்க உழைத்த வரும் இவரே. இவருடைய பெயரால் ஒரு கூடம் இந்த வைத்தியசாலையில் உண்டு.

வைத்திய கலாநிதி திருமதி கெங்கம்மா அவர்களை இங்கே பணியாற்றக் கொணர்வித்தவரும் இவரே. இதன் பயனாக இவ் வைத்தியநிலையம் பெரும் பெயரும் புகழும் வருவாயும் பெற்றுவந்தது.

யாழ் இந்துக்கல்லூரிப் பழையமாணுக்கர் சங்கம் நிகழ்த் திய களியாட்ட விழாவிலும் நிருவாகப் பெரும்பொறுப் பேற்று அதனை வளம்பெறச் செய்து கல்லூரிக்காகத் தனது கடமையைப் புரிந்த புகழும் இவருக்குண்டு.

கொழும்பு மாநகரிலே சட்டக்கல்லூரி மாணுக்கனாக விருந்தபொழுது Y. M. C. A. Forum இவருக்குப் பெரு வாய்ப்பளித்தது. அதன் Speaker ஆக ஒரு ஆண்டு பதவி வகித்து நன்மதிப்பைப் பெற்றிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நடராஜன் எல்லார்க்கும் நல்லவனே'

## வெண்பா

நல்லவன் நாதன் நடராசன் நாடெல்லாம்
சொல்லுவன் செம்மைத் திறந்திகழச் — சொல்லுவன
ஆக்கநெறி அஞ்சா அடல்நெஞ்சன் ஆரிடத்தும்
மாக்கருணை மிக்க மகன்.

அரசியல் வாழ்க்கை அறமெனக் கொண்டு
பரசியல் மூதவை பன்னாள் — முரசொலி
ஈழத் திருநா டெழவங் கினந்தமிழ்
வாழத் தொனியெடுத்தான் மாண்.

யாழ்மக்கள் மண்வளத்தை ஆக்கமென நோக்கிநலம்
சூழ்மிக்க திட்டந் தொடுத்திருந்தான் — தாழ்மக்கள்
மேனேக்கத் தர்மசமம் வேண்டிநின்றான் ஈழச்செங்
கோனேக்கி ஆண்டான் குடை.

சட்டத்தை ஊரவர்க்காய்ச் சால்புடன் வாதாடும்
சட்டத்தைச் செய்திறனற் சீரமைத்துப் — பட்டத்தை
நாடாது சிங்கேறாய் நாநயத்தால் முன்னின்றான்
வாடாது நெஞ்சின் நயம்.

சைவ நெறியணி சாரவெழில் உற்றுமல்லைத்
தெய்வ மிவர்பெருந் தேரமைத்து — மெய்வருந்திக்
கண்ணும் கருத்தாய்க் கடவுட் பணிசெய்தான்
மண்ணிற் பிறப்பை மதித்து.

இல்லறத்திற் கேற்ற இரதி அரசியொடு
பல்லறத்திற் பண்பாய்ப் படிந்துமக்கள்—சொல்லுறுத்தி
வாழ வகுத்தான் மருவு மகார்கிளை
சூழ மிகுத்தான் துணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திதி வெண்பா

பிரபவத்து மாசிப் பிறைசார் சதுர்த்தி
வரவிபத்தில் வாழ்வு மறைந்து — பெருபவத்திற்
சுப்பிர மண்யர் சுதன்நட ராசமன்
அப்பிர மற்காளா ஞன்.

## தேற்ற வெண்பா

நடராசன் எல்லார்க்கும் நல்லவன் துன்பம்
படராச்சன் மார்க்கன்பண் பாரிற் — கிடராச்சே
என்று கலங்காதீர் ஈசனிடம் ஈழந்தா
என்றங் கிறைஞ்சுகின்று னே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கோளறு திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொடாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெறி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிநுதல் நங்கையோடு வடபால் இருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன்அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்கள் ஆன பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

நஞ்சணி கண்டன்எந்தை மடவாள்த னோடும்
விடையேறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உரும்இடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வாள்வரி அதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள்த னோடும் உடனாய்
நாள்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

செப்பிள முலைநன்மங்கை ஒருபாக மாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும்அப்பும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாதம் மிகையான பித்தும்
வினையாக வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்பட விழிசெய்தன்று விடைமேல் இருந்து
மடவாள்த னோடும் உடனாய்
வாள்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ்இலங்கை அரையன்த னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

பலபல வேடமாகும் பரதாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும்மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும்நாகம் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரோ டமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில்கொள்ஆலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் திகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலைஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௨

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாழ்வாழ்க
ஏக னநேகன் இறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்க மளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்த நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நன்றி நவில்கின்றோம்

எமது குடும்பத் தலைவரின் திடீர் மறைவால் நாம் ஆற்றொணாத்துயரில் இருந்த நேரத்தில் எமக்குப் பல வகைகளிலும் உதவிபுரிந்த தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை மருத்துவ நிபுணர்களுக்கும், மற்றும் ஊழியர்களுக்கும், இவரது மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து எமக்கு மன ஆறுதல் கூறி எம்மைத் தேற்றிய உற்றார் உறவினர் மற்றும் இனிய நண்பர்களுக்கும், மரணச் சடங்கில் கலந்து கொண்டும், மலர் வளையங்களையும், ஆறுதல் செய்திகளையும் அனுப்பிவைத்தோர்க்கும் நாம் எமது மனமுவந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

குறுகிய காலத்தில் இந்த நினைவு மலரை அழகாக ஒழுங்குபடுத்தி வண்ணமுற அச்சிட்டு உதவிய சுன்னுகம் திருமகள் அழுத்தக முகாமையாளருக்கும் சக ஊழியர்களுக்கும் எமது விசேட நன்றி உரித்தாகுக.

மேலும் இன்றைய காலகட்டத்தில் தமது இன்னல்களையும் பொருட்படுத்தாது எமது அழைப்பை ஏற்று இன்று எமது குடும்பத் தலைவரின் 90வது நாட் கிரியைகளில் பங்கு பற்றிய அனைவருக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

"ஜீவபதி"
மல்லாகம்
21-5-88

திருமதி சத்தியவதி நடராசாவும்,
மக்களும், மருமக்களும்

திருமகள் அழுத்தகம், சுன்னுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org